# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • அக்டோபர் 9, 2021 Weekly E-paper • October 9, 2021


## கோயில் தலமனைத்தும் பள்ளி செய்குவோம்!



**லக்கிம்பூர் கொலை**

மா.உதயகுமார்

**ஃபோர்டு - நம்பிக்கைத் துளிர்க்கிறது**

தலையங்கம்

**புலம்பெயர் தமிழர்நல வாரியம்**

மதிவாணன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 •அக்டோபர் 9, 2021 Weekly E-paper • October 9, 2021


## கோயில் தலமனைத்தும் பள்ளி செய்குவோம்!

**சுப. வீரபாண்டியன்**



"பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்" என்றார் பாரதி! ஆனால் இன்றைய நம் தமிழக அரசு, "கோயில் தலமனைத்தும் பள்ளி செய்குவோம்" என்னும் முழக்கத்தை முன்னெடுத்துச் செயலிலும் இறங்கிவிட்டது.

கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில், தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டலின்படி, அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு சேகர்பாபு, அறநிலையத்துறையின் சார்பில் பத்து கல்லூரிகள் தொடங்கப்படும் என்று அறிவித்தார். இதோ...முதல் நான்கு கல்லூரிகளுக்கான தொடக்க அறிவிப்பு வந்துவிட்டது!

சென்னை கொளத்தூர், திருச்செங்கோடு, திண்டுக்கல் அருகே உள்ள தொப்பம்பட்டி, விளாத்திகுளம் ஆகிய நான்கு ஊர்களில் இவ்வாண்டு கல்லூரிகள் உதயமாகின்றன. வரும் 26ஆம் தேதி முதல் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன.

அர்த்தநாரீஸ்வரர் கலைக்கல்லூரி, ஸ்ரீ சுப்ரமணியசாமி கலைக்கல்லூரி என்று அந்தந்த ஊரில் உள்ள கடவுளர்களின் பெயர்களிலேயே அக்கல்லூரிகளின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. நல்ல தமிழ்ப்பெயர்களில் அல்லது அந்தக் கடவுளர்களின் பெயர்களையே தமிழில் மாற்றிப் பெயர் சூட்டியிருக்கலாமே என்று நண்பர்கள் சிலர் கூறினர். இல்லை, இதுதான் சரியென்று தோன்றுகிறது. பெயரை மாற்றினால், உடனே அதனைப் பிடித்துக்கொண்டு, 50 காவித் துண்டுகள் கூடி நின்று ஆர்ப்பாட்டம் என்பார்கள். கல்வியைப் பரப்பும் நம் நோக்கம் திசை திருப்பப்படும்.

எந்தப் பெயரில் இருந்தால் என்ன, ஏழை, எளிய பிள்ளைகளுக்குக் கல்வி கிடைக்கிறதே! அதைத்தான் நாம் கொண்டாட வேண்டும். "காரியம் பெரிதா, வீரியம் பெரிதா?" என்று கேட்பார் அய்யா பெரியார். காரியம்தான் பெரிது!

ராஜாஜி தன் ஆட்சிக் காலத்தில் மூடிய பள்ளிகளை எல்லாம் பெருந்தலைவர் காமராஜர் திறந்தார். பேரறிஞர் அண்ணாவும், தலைவர் கலைஞரும் மேலும் பல பள்ளிகளை உருவாக்கினார்கள். அனைவரும் அய்யாவின் கனவை நினைவாக்கினார்கள். இன்று அய்யாவின் பேரன், தமிழக முதல்வர் தளபதி அதே பாதையில் அடுத்த அடி எடுத்து வைத்திருக்கிறார். இன்றைய அறநிலையத் துறை அமைச்சரோ, முதல்வரின் சொல்லை எல்லாம் செயலாக்கிக் கொண்டுள்ளார்.

அதனால்தான் சிலர், 'கலைஞரை விட ஸ்டாலின் ஆபத்தானவர்' என்று கதறிக் கொண்டுள்ளார்கள். ஆம், எல்லோருக்கும் கல்வி என்பது அவர்களுக்கு ஆபத்தானதுதானே! ●

### "கண்டா வரச் சொல்லுங்க!"

"சென்னை, பூந்தமல்லியில இருக்கிற குயின்ஸ் லேண்ட் நிலம், காஞ்சி மாவட்டத்தின் ரெண்டு கோயில்களின் சொத்து. துணிச்சல் இருந்தா அதுல கைவச்சுப் பாக்கட்டும்ன்னேன். அப்பிடிச் செய்ஞ்சிட்டா, நானே வந்து பாராட்டுறேன்"என்று கொக்கரித்தார் ஹெச். ராஜா.

இப்போது அறநிலையத்துறை அமைச்சர் சேகர் பாபு, அங்கு ஆக்கிரமிக்கப்பட்டிருந்த 70 ஏக்கர் நிலத்தின் மீது நடவடிக்கை எடுத்துவிட்டார். ஆனால் அதனைப் பாராட்டுவதற்கு வருவதாகச் சொன்ன ஹெச். ராஜாவைக் காணவில்லை ஸ்ரீவில்லிபுத்தூர் நீதிமன்றம் அனுப்பியுள்ள பிடி வாரண்டுக்குப் பயந்து எங்கோ பதுங்கியிருப்பதாகச் சொல்கிறார்கள்.



கண்டா வரச் சொல்லுங்க!

### உழைக்கும் மக்கள் சோம்பேறிகளாம்!

2005ஆம் ஆண்டு, மகாத்மா காந்தி ஊரக வேலைத்திட்டத்தின் கீழ் 100 நாள் வேலைத்திட்டம் தொடங்கப்பட்டது. அங்கங்கே தூர் வாருதல் போன்ற பணிகள் நடைபெற்றன. சிற்றூர்களில் வாழும் ஏழை மக்களுக்குப் பெரும் உதவியாகவும் அத்திட்டம் அமைந்தது. இப்போது அதனை 150 நாள் வேலைத்திட்டமாக மாற்றும் அறிவிப்பு வந்துள்ளது.

இது பொறுக்கவில்லை சிலருக்கு! நூறு நாள் வேலைத்திட்டம் நாசக்காரத் திட்டமாம். கிராமத்து மக்களைச் சோம்பிக் கிடக்க வைக்கிறதாம். எல்லோரும் ஏரிக்கரையில் அமர்ந்து சீட்டாடுகிறார்களாம். இதனால் விவசாயம் வீணாகி விட்டதாம்" - சொல்கிறார் ஒரு சூரப் புலி! அதனை ஆதரிக்கிறார் ஒரு அண்ணாமலை!



இந்த மக்கள் விரோதிகளைக் கண்டு குமுறுகின்றனர் உழைக்கும் மக்கள்! அந்த வெட்டிப் பேச்சாளர்களை நேரில் வந்து பார்க்கச் சொல்லுங்கள் என்கின்றனர் அவர்கள்

# லக்கிம்பூர் கொலை

மா.உதயகுமார்




பாஜக ஆளும் மாநிலங்கள், ஆள நினைக்கும் மாநிலங்கள் எப்போதுமே கலவரங்களுக்கும் கொலைகளுக்கும் பெயர் போனவை. கலவரங்கள் மூலமாகவே அனைத்தையும் தீர்த்துவிடலாம் என்னும் சித்தாந்த அடிப்படைவாதம் கொண்டது பார்ப்பனிய ஆர் எஸ் எஸ் கும்பல்.

ஒன்றா இரண்டா இவர்களுடையக் கலவரங்களும் கொலைகளும்? சென்ற வாரம் உத்தரப்பிரதேச மாநிலம் லகிம்பூர் கெரி விவசாயிகள் போராட்டத்தில் மத்திய இணை அமைச்சர் அஜய் மிஸ்ராவின் மகன் ஆஷிஷ் மிஷ்ராவின் கார் புகுந்து நான்கு விவசாயிகள் கொல்லப்பட்ட சம்பவம் உலகம் முழுவதும் பேசுபொருளாக இருக்கிறது.

மத்திய இணை அமைச்சரின் மகன் இன்னும் கைது செய்யப்படாமல் பாதுகாக்கப்படும் நிலையில் அந்த காரின் ஓட்டுநர்தான் பலியாகியிருக்கிறார். பத்திரிக்கையாளர் ஒருவரும் பலியாகியிருக்கிறார். அப்பாவி மக்களுக்குள் மோதலை ஏற்படுத்தி, ஆதாயத்தை பாஜகவும் ஆர்எஸ்எஸ் அனுபவிக்கிறது.

சிலர் இது இரண்டு தரப்புக்கும் இடையில் நடந்த கலவரம் என்றும் இதற்கும் பாஜகவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் சொல்கிறார்கள். ஆனால் பாஜக தலைவர்களுள் ஒருவரான ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வருண் காந்தி, உத்தரப்பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத்தை, இதில் சம்பந்தப்பட்ட காருக்குச் சொந்தக்காரரான பாஜகவைச் சேர்ந்தவரை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். அவருடைய ட்வீட்டில் இந்த சம்பவம் பற்றி "shake one's soul" என்று குறிப்பிட்டுள்ளார்.

பாஜகவைச் சேர்ந்த ஒருவரே இப்படி நடுங்க வைக்கக்கூடிய ஒரு கொலை குற்றமாக இந்த லகிம்பூர் கெரி சம்பவம் இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார். உடனே அவரும் அவருடைய தாயாரான மேனகா காந்தியும் பா.ஜ.கவின் தேசியச் செயற்குழுவில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். உச்ச நீதிமன்றம் தாமாகவே முன்வந்து(suo motu) இந்த வழக்கை விசாரித்து வருகிறது. உச்சநீதிமன்றமே இவ்வளவு வெகுண்டெழுந்து கேள்விகளைத் தொடுப்பது அவ்வளவு எளிதில் நடந்து விடாது. அந்த அளவிற்கு மோசமான நிகழ்வாக இந்த லக்கிம்பூர் கேரி நிகழ்வு அமைந்திருக்கிறது.


Varun Gandhi
@varungandhi80

The video is crystal clear. Protestors cannot be silenced through murder. There has to be accountability for the innocent blood of farmers that has been spilled and justice must be delivered before a message of arrogance and cruelty enters the minds of every farmer. 🙏🏻🙏🏻

319K views

8:55 am · 07 Oct 21 · Twitter for iPhone

மேலும் உச்சநீதிமன்றம், ஏன் சம்பந்தப்பட்ட மத்திய இணையமைச்சர் என் மகன் இன்னும் கைது செய்யப்படவில்லை என்று கேள்வி கேட்டிருக்கிறது. அதற்கு, அவருக்குச் சம்மன் அனுப்பி இருப்பதாக உத்தரப்பிரதேச அரசு தரப்பில் பதிலளிக்கப்பட்டுள்ளது. எங்காவது செக்சன் 302 போடப்பட்ட ஒருவருக்குச் சம்மன் கொடுத்து பார்த்ததுண்டா என்றும் உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பி இருக்கிறது. ஆஷிஷ் மிஸ்ராவை காவல்துறையின் கஸ்டடியில் எடுக்க ஏன் மறுக்கிறீர்கள் என்றும் இப்படித்தான் மற்ற வழக்குகளில் கொலை குற்றம் சாட்டப்பட்ட ஒருவரை நடத்தி இருக்கிறீர்களா என்றும் கேட்டுள்ளது.


ஆஷிஷ் மிஷ்ரா

கொலைக்குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்கு சம்மன் கொடுக்கும் அரசு, ஒரு பண மோசடி வழக்கு விசாரணைக்காக முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்தை சுவர் ஏறி குதித்து கைது செய்ததையும் நாம் பார்த்தோம்.

ஓராண்டிற்கு மேலாகத் தொடர்ந்து போராடி வரும் விவசாயிகளின் போராட்டத்தை எப்படியாவது சீர்குலைத்து விடவேண்டும் என்பதற்காகப் பல்வேறு முயற்சிகளில் பாஜக அரசு ஈடுபட்டு வருகிறது. சில நாட்களுக்கு முன்பு உச்சநீதிமன்றமே விவசாயிகளை அவர்களுடையப் போராட்டத்திற்காகக் கண்டித்தது. அப்படிப்பட்ட உச்சநீதிமன்றமே இன்று உத்தரப்பிரதேச அரசைக் கண்டித்துள்ளது.

ஒரு நாட்டின் அடிப்படை ஆதாரமான விவசாயத்தை அளிப்பதில் பாஜக அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது. ஏழை எளிய உழைக்கும் மக்களை வாட்டி வதைக்கிறது. இப்படிப்பட்ட நிகழ்வுகள் உலகின் வேறு எந்த பகுதியிலாவது நடப்பதாக நாம் கேள்விப்படுகிறோமா?

போராட்டக்காரர்களைக் கொலை செய்துவிட்டால் போராட்டம் முடிந்து விடுமா? பயத்தை ஏற்படுத்தி, இனி போராட வருபவர்களைத் தடுக்க முடியுமா?

நியாயம் கிடைக்கும் வரை மக்கள் போராட்டம் முடியாது!

ஆனால் இவர்கள் போடும் ஆட்டம் விரைவில் முடிந்து விடும்.

# கருஞ்சட்டைப் பதிப்பகம்

**விரைவில் வெளிவருகின்றன...**

★ நீங்கள் எந்தப் பக்கம்?
- பேரா. சுப.வீரபாண்டியன்

★ பச்சைத் துரோகம்
- ஆழி.செந்தில்நாதன்

★ திராவிடத் தமிழ்த் தேசியம்
- வாலாசா வல்லவன்

★ தமிழ்த் தேசிய அரசியலைச் சிதைக்கும் பார்ப்பனியக் கங்காணிகள்
- பொழிலன்

**இப்போது விற்பனையில்...**

★ ஆரிய மாயை - சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் - நீதிதேவன் மயக்கம்
- அறிஞர் அண்ணா

★ கருவறை நுழைவும் சாதி ஒழிப்பும்
- முனைவர் வெ.சிவப்பிரகாசம்

★ திராவிடம் சுயமரியாதை சமூகநீதி (தொகுப்பு)

தொடர்புக்கு
120 என்.டி.ராமாராவ் தெரு, ரங்கராஜ புரம், கோடம்பாகம், சென்னை - 600 024
தொலைபேசி: 044-2472 6408 / 9940407468
இணையதளம்: www.karunchattaibooks.com


தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## ஃபோர்டு - நம்பிக்கை துளிர்க்கிறது

கார் உற்பத்தியில் முதன்மையானதாகக் கருதப்படும் நிறுவனம், ஃபோர்டு நிறுவனம்.

அமெரிக்காவைச் சேர்ந்த இந்நிறுவனம் 1995 ஆம் ஆண்டில் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி சென்னை மறைமலைநகரிலும், பின்னர் குஜராத் சனாந்த் என்ற இடத்திலும் தொழிற்சாலைகளை நிறுவி உற்பத்தியைத் தொடங்கியது.

ஆண்டுக்கு 2 இலட்சம் கார்களை உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்தது இந்நிறுவனம்

இப்பொழுது உற்பத்தியை நிறுத்துவதாக அதாவது ஆலையை இழுத்து மூடுவதாக அறிவித்துள்ளது.

அண்மைக் காலமாக மஹிந்திரா நிறுவனத்துடன் இணைந்து 4 இலட்சம் கார்கள் உற்பத்தி செய்ய, 2019 ஆம் ஆண்டு ஒப்பந்தம் செய்யப்பட்டது என்ற செய்தி வெளிவந்த போதும் ஃபோர்டு - மஹிந்திரா ஒப்பந்தம் நடைமுறைக்கு வராமல் போய்விட்டது.

ஆனால் ஃபோர்டு நிறுவனத்தின் உற்பத்தி நிறுத்த அறிக்கை ஓர் அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது.

இத்தொழிற்சாலையை நம்பி 4 ஆயிரம் நிரந்தரம் மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களும், 30 ஆயிரக்கிற்கும் மேற்பட்ட மறைமுகத் தொழிலாளர்களும் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டு உள்ளது.

இந்நிறுவனத்திற்காக உதிரி பாகங்கள் தயாரிக்கும் சிறு உற்பத்தி நிறுவனங்கள், அதன் தொழிலாளர்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாக இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் தமிழ் நாட்டின் தொழில் துறையில் நலிவு ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கும் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள், தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களுடன், ஃபோர்டு நிர்வாகத்துடன் பேசுகிறார் என்ற செய்தி தொழிலாளர்களுக்குப் பெரும் ஆறுதலைத் தருகிறது.

ஃபோர்டு தொழில் நிறுவனத்தை டாடா நிறுவனம் வாங்குவது குறித்து டாடா நிறுவன உயர் அதிகாரிகள் முதலமைச்சரைச் சந்தித்துப் பேசிய நிலையில், தலைமைச் செயலகத்தில் முதல்வர் இது குறித்து ஆலோசனை நடத்துகிறார்.

மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் நல்ல ஆட்சியைத் தந்து கொண்டு இருக்கும் முதல்வர் ஸ்டாலின் அவர்களின் முயற்சி வெற்றி பெறும், தொழிலாளர்கள் அமைதி பெறுவர் என்ற நம்பிக்கை துளிர்க்கத் தொடங்கி விட்டது.


ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்: எழில். இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை



இணையதளம்
www.keetru.com, www.karunchattaibooks.com
மின் அஞ்சல்: karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408

# புலம்பெயர் தமிழர்நல வாரியம்

**மதிவாணன்**



திரை கடல் தாண்டித் திரவியம் தேடும் தன்மை நம் தமிழர்க்கு எப்பொழுதும் உண்டு. அவ்வேளையில் வரும் துயர்களை, சவால்களைச் சமாளிக்க ஒரு பாதுகாப்பு அரணாக அமைகிறது, தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள "புலம்பெயர் தமிழர்நல வாரியம் ".

புலம் பெயர் தமிழர்கள் குறித்தத் தகவல்களைத் திரட்டித் தரவுதளம் அமைக்கப்படுகின்றது. அப்பொழுதுதான் வாரியத்தின் தேவை எப்படி, எங்கே இருக்கின்றது என்பது தெளிவாகத் தெரிய வரும்.

இந்தத் தரவுதளத்தின் முக்கியத்துவத்தை அறிய வேண்டுமானால், கொரானா முதல் அலையில் புலம் பெயர்ந்து வாழும் மக்களுக்கு ஏற்பட்ட இக்கட்டான நிலையை நினைத்துப் பார்த்தால் புரியும். வேலை தேடி வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் நாடு திரும்பவும் முடியாமல், வேலை முடக்கத்தால் அங்கேயே இருக்கவும் முடியாமல், சரியான வழிகாட்டுதல் இன்றித் தவித்தது நினைவிற்கு வரும்.

தன் மக்கள் எங்கெல்லாம் இருக்கிறார்கள் என்று தெரிந்தால்தான், அரசு அதற்கு ஏற்பத் திட்டமிட்டுச் செயல்பட முடியும். இல்லாவிட்டால் கோரிக்கை வந்த பின்தான் அதற்கான ஆயத்தப் பணியில் ஈடுபடவே முடியும்.

வெளி நாடுகளில் வாழும் எளிய நம் மக்களுக்கு, வெளி உறவுத்துறை என்பது ஓர் எட்டாக்கனியாக இருக்கிறது. இனி தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அப்படி, இருக்காது. மக்கள் எளிதாக தொடர்பு கொள்ள, ஆலோசனை பெறக் கட்டணமில்லாத் தொலைபேசி, வலைதளம், அலைபேசிச் செயலிகள் இச்சேவைக்காக வழங்கப்படும் என அறிவித்துள்ளார் முதல்வர்.

முக்கியமாக, உடல் உழைப்பு சார்ந்த வேலைகளுக்காக வெளிநாட்டிற்குச் செல்லும் தொழிலாளர்களிடம், சட்டத்திற்குப் புறம்பாகச் சிலர் செய்யும் உழைப்புச் சுரண்டல் பற்றிக் கேள்விப்பட்டு இருப்போம். அப்படிப்பட்ட நிலையில் சிக்குவோருக்கு அந்த நாட்டுச் சட்டங்கள் மற்றும் அவற்றை அணுகும் முறை ஆகியவைத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இவர்களைப் போன்றவர்களுக்கு உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம்.

புலம்பெயர் தமிழர்நல வாரியத்தில் தனியாக சட்ட உதவி மையம் செயல்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது கூடுதல் சிறப்பு.

வாரியத்தில் பதிவு செய்து கொள்பவர்களுக்குக் காப்பீட்டுத் திட்டங்கள் வழங்கப்படும். இதில் விபத்து, மருத்துவம், ஆயுள் காப்பீட்டுத் திட்டங்கள் அடங்கும். அத்துடன் அடையாள அட்டையும் வழங்கப்படும். பணியின் போது இறக்க நேரிட்டால், அக்குடும்பத்திற்கு கல்வி மற்றும் திருமணத்திற்கான ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று முதல்வரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் தாயகம் திரும்பும் புலம் பெயர்த் தமிழர்களுக்கு மானியத்துடன் கடன் வசதி செய்து தரப்பட இருக்கின்றது.

ஜனவரி 12 புலம் பெயர்ந்த உலகத் தமிழர் நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. பொங்கல் கொண்டாட்டத்திற்குச் சற்று முன்னதாக இந்நாள் அறிவிக்கப்பட்டுள்ளதை எதார்த்தமாக அமைந்ததாகக் கருத முடியவில்லை.

பெருமளவில் பொங்கலுக்காக ஊர் திரும்பும் தமிழர் பண்பாட்டுடன் இணைந்ததாகவே இதை உணர முடிகின்றது. பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்களை ஒருங்கிணைக்கவும், சமூகத்திற்கு அவர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாகவும் இந்த நாள் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளி நாடுகளில் வாழ்பவர்களுக்குப் பெருமளவில் ஒரு ஏக்கம் உண்டு. அது, அடுத்த தலைமுறையினர் தமிழ் மொழி, தமிழர் பண்பாட்டை விட்டு விலகிப் போவதும், அறிந்து கொள்ள முடியாமல் போவதும் ஆகும். இதனைப் போக்கும் வகையில் இவ்வறிவிப்பில் குழந்தைகளுக்குத் தமிழ் பயிற்றுவிப்பு இடம்பெற்றிருக்கிறது. 'கரும்பு திங்கக் கூலி' என்ற பழமொழியைக் கேள்விப்பட்டு இருக்கிறோம். இங்கு தமிழ் பயிற்றுவிக்க ஊக்கத்தொகையும் உள்ளது. நலச்சங்கங்கள் ஒருங்கிணைப்பு, அதன் வழியே கலை, இலக்கிய, பண்பாட்டுப் பரிமாற்றங்களை வெளிநாடுகளுடன் தமிழ்நாடு ஏற்படுத்திக் கொள்ள புலம் பெயர் தமிழர்களைப் பயன்படுத்திக் கொள்ளவும் வழி உண்டு.

இதற்காக ரூபாய் 5.50 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இதனால் இரு நாட்டிற்கும் பாலமாகப் புலம் பெயர்த் தமிழர்கள் செயல்பட முடியும்.

இவற்றோடு சேர்த்து, ரூபாய் 5 கோடி நிதியை அரசு முன்பணமாகக் கொண்டு இவ்வாரியம் உருவாகப்படுகின்றது. வாரியத்திற்கு மூலதனச் செலவினமாக 1.4 கோடி ஒதுக்கப்படும். மற்றும் ஆண்டுதோறும் ரூபாய் 3 கோடி நலத்திட்டத்திற்காகவும், நிர்வாகச் செலவிற்காகவும் ஒதுக்கப்பட இருக்கிறது. மொத்தத்தில் ரூபாய் 20 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவித்துள்ளார் நம் முதல்வர்.

வெளிநாடுகளில் வேலை செய்யும் தமிழர்கள் தங்கள் ஊதியத்தை, அரசு மற்றும் தொழில் நிறுவனங்களில் பாதுகாப்பாக முதலீடு செய்யப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் தன் சொந்த ஊருக்கு உதவ விரும்புவோர்களுக்கு 'எனது கிராமம்' என்ற திட்டமும் அறிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் மனம் அறிந்து செயல்படும் அரசாக, முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் தமிழ் நாட்டை வழி நடத்துகின்றார் என்பதற்கு, "புலம்பெயர் தமிழர்நல வாரியம்" சிறந்த எடுத்துக்காட்டாக இருப்பதைப் பார்க்க முடிகிறது.

அன்று "புலம் பெயர் மாக்கள்" என்று சிலப்பதிகாரம், பட்டினப்பாலை போன்ற இலக்கியங்களில் காணப்படும் பெயரில், இன்று "புலம்பெயர் தமிழர்நல வாரியம்" அமைவது மக்களின் வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை. ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,